புதுமலர்: 20 இதழ்: 05 புரட்டாதி - ஐப்பசி

# அனல்

01.09.2023

ஆசிரியர்:
போதகர் வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



# அர்ப்பணிப்பு

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. குறுக்கெழுத்துப்போட்டி - 115
06. வாலிபர் வளாகம்
07. பெண்கள் பக்கம்
08. அருட்பணியாளர் சரிதை
09. அனலின் ஆன்மீக விருந்து
10. வினா விடை - 117
11. பிறருடைய கருத்து




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்பவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இம்மட்டும் நடத்திய தேவன் இனிவரும் காலங்களெல்லாம் உங்களை அற்புதமாக நடத்துவார்.

புயலின் மத்தியில் தேவ வழிநடத்து தலைப் பெற்றுக் கொண்ட பவுல் பயங்கர சூழ் நிலைக்கு மேலாக தேவனுடன் உறவு வைத்திருந் தார். தேவனுடனுள்ள உறவு என்பது சூழ்நிலை களுக்கு மேலானது.

உங்கள் வாழ்வில் ஏற்படும் எவ்விதமான பயங்கரங்களும், ஆபத்துக்களும் தேவனுட னான உங்கள் உறவை பாதிக்கவிடக்கூடாது. ஒரு கைதியாக கப்பலில் சென்ற பவுலால் அந்தக் கப்பலில் பயணித்த மற்றவர்களுக்கு எப்படி ஆறுதலையும், துணிவையும் ஏற்படுத்த முடிந்தது. அவர்களுக்கு எப்படி தைரியம் சொன்னார்? பெரும் புயலின் மத்தியிலும் பவுல் தேவனுடன் உறவு வைத்துக் கொண்டதே காரணம்.

பல வேதனைகளும், உபத்திரவங்களும், குறைவுகளும், ஆபத்துக்களும் சூழ்ந்த உலகில் தேவனுடைய பிள்ளையே நீ அவருடன் சரியான தொடர்பை வைத்துக் கொள். பலருக்கு ஆசீர் வாதமாக தேவன் உன்னைப் பயன்படுத்துவார்.

~ ஆசிரியர் ~


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## உன்னுடைய குடும்பம் முக்கியம்

வை. விமலதாஸ்

ஒரு குடியானவன் ஒரு புதிய ஊருக்கு சென்றான். அந்த ஊரின் அழகையும், வளத்தையும் கண்டு மயங்கினான். ஆகவே அந்த ஊரில் தனக்கென்று ஒரு நிலம் வாங்க எண்ணி, அந்த ஊர்த்தலைவரிடம் சென்றான். அவர் அவனிடம் ஆயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு, ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றார். அவர்களுடன் சில ஊர் மக்களும் சென்றிருந்தனர். ஊர்த்தலைவர் அவனைப் பார்த்து, எங்கள் ஊர் வழக்கப்படி 'ஒரு நாள்' நிலம் தருகிறோம் என்றார்.

அப்படியென்றால் என்ன ???... என்று வினவினான் குடியானவன். அதுவா, நீ இப்பொழுது புறப்பட்டு, எவ்வளவு தூரம் நிலத்தை சுற்றி வருகிறாயோ அந்த நிலமெல்லாம் உனக்கு சொந்தமாகி விடும். ஆனால் இருளடைவதற்கு முன் நீ புறப்பட்ட இடத்தை வந்தடைய வேண்டும். சிறிது தாமதித்தாலும் உனக்கு ஒன்றுமில்லை என்றார்...!!!

அதிசயமான இந்த முறை அவன் ஆசையை தூண்டி விட்டது. சரியென்று வரிந்து கட்டிக்கொண்டு அவன் ஓட ஆரம்பித்தான். அங்கே பார்த்தான், ஆகா..! ஒரு அழகிய மாமரத்தோட்டம் இது கிடைத்தால் எவ்வளவு நலம் என்று அதை சுற்றி ஓடினான். கொஞ்ச தூரத்தில் இன்னொரு பூந்தோட்டம் அதற்கு அருகில் பளிங்கு போன்ற நீர் ஓடும் ஆறு அதையும் சுற்றி வளைத்துக் கொண்டான். துரவு... வயல்... என கண்ணில்பட்ட எதையும் விடாமல் சுற்றினான்.

ஆயிரம் ரூபாவுக்கு இவ்வளவு நிலமா? எவ்வளவு இலாபம்??? இந்த ஊர்க்காரர்கள் எத்தனை முட்டாள்கள்??? என எண்ணியபடி தொடர்ந்து ஓடினான். அப்போது இருள ஆரம்பித்தது. ஊர்த்தலைவர் கூறிய நிபந்தனை நினைவுக்கு வர தான் கிளம்பின இடத்தை நோக்கி இருளடைவதற்குள் சென்றுவிடவேண்டுமே என்ற எண்ணத்துடன் விரைந்தான். அவன் கால்கள் தடுமாறின. இதயதுடிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக அடிக்க ஆரம்பித்தது. வியர்த்து ஊற்றியது. நா வறண்டது. கண்கள் ஒளி மங்கின. தள்ளாடினவனாக எப்படியோ அந்த இடத்தை வந்து சேர்ந்தான்.

ஊர்மக்கள் அவனை கரம் தட்டி வரவேற்றனர். ஆனால் பரிதாபம் வந்த சில நொடிக்குள் அங்கேயே சாய்ந்து விழுந்தான். விழுந்தவன் எழுந்திருக்கவே இல்லை. இனி அவனுக்கு ஆறடி நிலம் மட்டும் அவனைப் புதைக்கத் தேவை என்றார் ஊர்த்தலைவர்....

ஆம் நண்பர்களே, அந்த குடியானவன் தான் ஆசைப்பட்ட அனைத்தையும் தனக்கு சொந்தமாக்கினான். ஆனால் தன் உயிரையோ இழந்து விட்டான்....???

நம்மில் அநேகரின் வாழ்க்கைப் பயணமும் இப்படித்தான் இருக்கிறது. எதிர்காலத்திற்காக சேமிப்பு, பிள்ளைகளுக்காக மேலதிக நேர வேலை, ஞாயிற்றுக்கிழமை தேவனுடைய சபைக்கு செல்வதற்கும் குடும்பத்தோடு நேரத்தை செலவழிக்கவும் மனமில்லை....!!!

ஒரே நோக்கம் சம்பாதிப்பது மாத்திரமே. கடினப்பட்டு வேலை செய்து இறுதியில் கை நிறைய சம்பாத்தியம் உள்ளது, ஆனால் உள்ளத்திலோ கவலை. பிள்ளைகள் மனம் போன போக்கில் வளர்ந்ததால் அவர்களைக் குறித்ததான கவலை இதனால் என்ன பயன் ???

பிள்ளைகளோடும் குடும்பத்தோடும் சந்தோஷமாக இருக்க வேண்டிய காலங்களில் உழைத்து, உழைத்து வீணாக்கின நாட்கள் திரும்பவும் நினைத்தாலும் வருமா ???


நம் ஆத்துமா விலையேறப்பெற்றது...!! நம் சரீரத்தை கட்டுக்கோப்பாக வைத்திருக்க எத்தனை முயற்சிகள் எடுத்துக் கொள்கிறோமா அதைவிட அதிகமாக நம்முடைய ஆத்துமாவை காத்துக் கொள்ள வேண்டும். குடும்பத்திற்கென்று கொடுக்க வேண்டிய நேரத்தை குடும்பத்திற்கும் கொடுக்க வேண்டும்....!!!

வருட முழுவதும் சம்பாதித்து விட்டு, குடும்பத்தை இழந்துப் போவோமானால் எத்தனை பரிதாபம் ???

**மத்தேயு 16:26 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி செய்யும் தேவன்!



பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு இனிய வாழ்த்துக்கள். தேவ கிருபையினால் இந்த ஆண்டின் அரைப்பகுதியை கடந்துவர கர்த்தர் கிருபை செய்தார்.

'உன் தேவனாகிய கர்த்தர் தாமே உனக்கு முன்பாக போகிறவர்' என்ற வசனத்தின்படியாக கர்த்தர் ஒவ்வொரு நாட்களும் நமக்கு முன்பதாக சென்று எல்லாவற்றையும் அற்புதமாக செய்து அதிசயமாக நடத்துகிறார். அவருக்கே சகல கனமும் துதி மகிமையுண்டாகட்டும்.

**சங்கீதம் 119:126a நீதியைச் செய்யக் கர்த்தருக்கு வேளைவந்தது.**

எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே இந்த பூலோக வாழ்க்கையில் நாம் கடந்து செல்லும் எல்லா பகுதிகளிலும் மற்றவர்கள் அறிந்த பகுதியாக இருக்கலாம். அல்லது மற்றவர்கள் அறியாத, அறியப்படாத பகுதியாக இருந்தாலும் எல்லாவற்றிலும் தமது சத்தியத்தின்படி நீதி செய்கின்ற தேவன் நம்மோடு இருக்கின்றார்.

அவர் நீதியை செய்வதற்கு ஒரு வேளை அதாவது நேரம் ஒன்று உண்டு. யாரும் தப்பிக்க முடியாது. அந்த வேளையிலே தேவன் தவறமாட்டார்.

**வெளிப்படுத்தல் 19:11 அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்களுடைய வாழ்க்கையிலும் உங்களுடைய நீதிகள் புறக்கணிக்கப்பட்டு, பெலனற்றதாக போகலாம். பதில் கொடுப்பதற்கு முடியாமல் போகலாம். மற்றவாகள் முன்பாக உறுதிப்படுத்தி காண்பிக்க ஏதுவில்லாதிருக்கலாம். ஆனாலும் பயப்படாதீர்கள்! சோர்ந்து போகாதீர்கள்! கர்த்தர் நீதி செய்யும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை உண்டு. அவர் உங்களுக்கு நீதியை செய்து முடிப்பார்.

நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவை நினைத்துப் பாருங்கள். அவருடைய நீதி, உண்மை, பரிசுத்தம், நற்கிரியை மனுஷர்களால் ஏற்றுக்கொள்ளப்படாமல் போனது. இராஜாக்களால் அசட்டை பண்ணப்பட்டார்.

**ஏசாயா 53:3 அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக் கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்த வரும், பாடு அநுபவித்தவருமாயிருந் தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங் களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.**

யாரை நாம் பார்க்க விருப்ப மில்லாமல் முகத்தை திருப்பினோமோ அதே இயேசுவை,

**பிலிப்பியர் 2:9-11 (9.) ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, 10. இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், 11. பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.**

ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய தேவன் இயேசுவின் வாழ்வில் நீதியை செய்யும் படியான வேளை வந்த போது நடந்த தைப் பார்த்தீர்களா?

அசட்டை பண்ணப்பட்டவர் - மதிக்கப்படத்தக்கவரானார்

அவரைப் பார்த்தால் அருவருப்பு – அவரைப் பார்த்தாலே விடுதலை

ஆம் தேவ நீதி இப்படித்தான் வெளிப்படும்.

உங்களுடைய வாழ்க்கையி லும் நீங்கள் செல்கின்ற பாதை இப்படியானதாக இருக்கின்றதா?

மற்றவர்களாலே ஒதுக்கப்படு கின்றீர்களா?

கவனிக்கப்படாதவர்கள் போன்று காணப்படுகின்றீர்களா?

வேண்டுமென்று கனவீனப் படுத்தப்படுகின்றீர்களா?

பிழையானவர் போன்று சித்தரிக்கப்படுகின்றீர்களா?

பயப்படாதீர்கள்....

கர்த்தர் உங்களுக்காக நீதி செய்யும் வேளை வந்தது. உங்கள் நீதி தேவனால் வெளிப்படும்.

1இராஜாக்கள் 3:16-28 இந்த வேதப்பகுதியை கண்டிப்பாக வாசித்துப் பாருங்கள்.

இங்கே தெரிந்து கொண்டே ஒரு பெண் பொய் சொல்கின்றாள். மற்ற பெண் உண்மையை பேசி நீதி கோருகின்றாள்.

ஆனாலும் உண்மையை பேசி, நீதியை கோரும் பெண்ணினாலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் நிரூபிக்க முடியவில்லை. எதை காண்பிப்பது? எப்படி பேசுவது? யார் சாட்சி? ஒன்றுமேயில்லை... நிர்க்கதியான நிலை.

இராஜாவுக்கு தேவன் கொடுத்த ஞானம்

**1இராஜாக்கள் 3:25-28 (25.) ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான். 26. அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள்; மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்துபோடுங்கள் என்றாள். 27. அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல், அவளுக்குக் கொடுத்துவிடுங்கள்; அவளே அதின்தாய் என்றான். 28. ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளிய ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்.**

ஆம் நாம் நம்பும் தேவன் சரியான நீதி செய்வார். உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் கடந்து செல்லும் பகுதிகளில் உங்களுக்காக நீதி செய்வார். பயப்படாமலும் கலங்காமலும் தைரியமாக சொல்லுங்கள்.

ஏனென்றால் நீங்கள் நம்பும் தேவன் அவர் நீதியுள்ள தேவன்.

யோசேப்பு நியாயமில்லாமல் இரண்டு ஆண்டுகள்; சிறையில் தேவ நீதி வெளிப்பட்டது. யோசேப்பு எகிப்தின் பிரதம மந்திரியாக இராஜாவுக்கு அடுத்ததாக தேவனாலே உயர்த்தப் பட்டான்.

பொறாமையினால் தாவீது சவுலினால் எத்தனையோ தடவை கொலை செய்யப்பட எத்தனிக்கப்பட்டான். அவனுக்கான நீதி மறைக்கப் பட்டது. யோனத்தான் தவிர அவனுக்காக யாரும் குரல் கொடுக்கவில்லை. தாவீது நாடுவிட்டு நாடு நாடாக ஓட்டம்.

பிரியமானவர்களே தேவன் இன்றைக்கும் ராஜரீகம் பண்ணுகிறார். நடந்தது என்ன? சவுலை தேவன் தண்டித்தார். தாவீதை இராஜாவாக்கி மேன்மைப்படுத்தினார்.

எனவே உங்களுடைய வாழ்க்கையிலும் ஒருவர் இருக்கிறார். அவர் நீதி செய்யும் வேளைக்காக காத்திருங்கள். அவர் உங்களுக்காக எல்லார் முன்பும் நீதி செய்வார்.

உங்கள் மூலமாக பரலோக தேவன் மகிமைப்படுவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உத்தமமான ராணி

ஜசிந்தா அக்கா




ஒரு குடும்பத்தில் இரண்டு ஆண் பிள்ளைகள். அவர்கள் இருவரும் இணை பிரியாத சகோதரர்கள். இவர்களுக்கு மிருகங்கள் வளர்ப்பது மிகவும் பிரியம். ஒரு நாள் வீதியில் நின்ற நாய் ஒன்றை வீட்டிற்கு கொண்டு வந்தார்கள். அதற்கு ராணி என்று பெயர் வைத்து மிகவும் அன்பாய் நேசித்தார்கள். ராணியும் அண்ணாவோடும் தம்பியோடும் உட்கார்ந்து கொள்ளும். அம்மாவிற்கோ நாய் என்றால் துளியும் பிடிக்காது. மிகவும் மனக்கஷ்டத்தோடு ராணிக்குச் சாப்பாடு போடுவாள்.

இணைபிரியாத அண்ணாவும் தம்பியும் மிகவும் ஒழுங்காகவும் நேரம் தவறாமலும் பாடசாலைக்குச் சென்று வருவார்கள். சில மாதங்கள் கழித்து இருவரும் பாடசாலைக்குப் போகும் போது மீண்டும் மிகவும் கொழுத்த அழகான நாய் குட்டி ஒன்றைக் கண்டார்கள். அந்தக் குட்டியைத் தூக்கிப் புல் பற்றைக்குள் ஒளித்து வைத்துவிட்டு பாடசாலைக்குச் சென்றார்கள். அங்கு இருவரும் நாய்க்குட்டித் தியானமாகவே இருந்தார்கள். பாடசாலை முடிந்ததும் ஓட்டமும் நடையுமாய் நாய்க்குட்டி இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

'ஐயோ.... பாவம்! பசியினால் சோர்ந்துவிட்டது'

என்றார் தம்பி.

'விரைவாய் வீட்டிற்குக் கொண்டு சென்று பால் கொடுப்போம்'

என்றார் அண்ணா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் நாய்க்குட்டியை வீட்டுக்குக் கொண்டு வந்தனர்.

நாய் குட்டியைக் கண்ட அம்மாவிற்குக் கடுமையான கோபம் வந்தது.

'ராணிக்கும், குட்டிக்கும் சாப்பாடு போடமுடியாது. ராணியை வெளியே போடு அல்லது குட்டியை வெளியே போடு'

என்ற அம்மா இவற்றை ஏற்க மறுத்துவிட்டாள். அண்ணா – தம்பியின் கெஞ்சுதலோ, கண்ணீரோ அம்மாவின் இருதயத்தை அசைக்கவேயில்லை. இருவருடைய இருதயமும் தவித்தது. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தனர். குட்டியை வைத்துக் கொண்டனர். இருவரும் ராணியைக் கட்டிப்பிடித்து அழுது முத்தம் கொடுத்து அதிக தொலைவில் உள்ள ஒரு பாழடைந்த கிணற்றுக்கு அழைத்துச் சென்று அதின் கழுத்தில் ஒரு பெரிய கல்லைக் கட்டிக் கிணற்றுக்குள் தள்ளிவிட்டனர். பின் இருவரும் அழுதுகொண்டே வீடு திரும்பினர்.

அன்று இரவு இருவரும் மிகுந்த கவலையோடு படுத்துக் கொண்டிருந்தனர். நள்ளிரவில் வீட்டிற்கு வெளியே ஏதோ ஒரு சத்தம் கேட்டது. அப்பா – அம்மா – இரு பிள்ளைகளும் எழுந்து நன்றாகக் கவனித்தனர். 'கதவைக் கீறுவது போன்ற சத்தம்' கதவைத் திறந்தனர்.

என்ன ஆச்சரியம்! ராணி இவர்களது முகத்தை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டே நின்றது.

இது தான் உத்தமம்.

பிள்ளைகளே எப்படிப்பட்ட சூழ்நிலையை தேவன் உங்களுக்கு அனுமதித்தாலும் தேவனண்டை வருவீர்களா? தேவனுடைய முகத்தை நோக்கிப் பார்ப்பீர்களா? தேவன் மேல் நம்பிக்கையாய் இருப்பீர்களா? இதுவே சிறந்தது.

உத்தமமான ராணி நாயை நினைத்துக் கொள்ளுங்கள்.

**யோபு 13:15 அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்.**



**சரியான விடை எழுதியவர்களில் பராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 116**
**சி.சுமித்திரா**
**(பாண்டவெட்டை)**



**குறுக்கெழுத்துப் போட்டி - 114**
**ஜெ.நிரோமி**
**(தர்மபுரம்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | 02 | | ◆ | ◆ | ◆ | ◆ |
| | | 04 | | | ◆ | 03 | | |
| | 05 | | | 06 | | | ◆ | |
| | ◆ | | | 08 | ◆ | | | 07 |
| | ◆ | ◆ | ◆ | ◆ | | | | 09 |
| | | | 11 | ◆ | 10 | | | |
| ◆ | 12 | | | | ◆ | | | 13 |
| | | | | 15 | ◆ | | | 14 |
| 16 | | | | | | | | ◆ |

## குறுக்கெழுத்துப் போட்டி 115

**இடமிருந்து வலமாக**

01. இந்த ராஜா புறாவைப் போல புலம்பினார்
03. சூசான் அரமனை இந்த தேசத்திலுள்ளது
06. 'எலிசா உயிர்ப்பித்த இவளுடைய குமாரன் இவன் தான்' என ராஜாவிடம் கூறியவன்
10. பழைய ஏற்பாட்டில் தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனை தரிசனமாய்க் கண்டவன்
12. தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன்
16. பெக்காவின் நாட்களில் குடிகளைச் சிறையாகக் கொண்டு போனவன்

**வலமிருந்து இடமாக**

07. இவள் தன் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடினாள்
09. இஸ்ரவேலரைச் சபிக்க கூலி பொருத்தப்பட்டவன்
11. மிஸ்பாவில் இஸ்ரவேலரை நியாயம் விசாரித்தவன்
13. எப்புன்னேயின் குமாரன்
14. தாமார் யூதாவுக்குப் பெற்ற குமாரர்களில் ஒருவன்
15. இவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்

**மேலிருந்து கீழாக**

01. இந்த தீர்க்கதரிசி கேபார் நதியண்டையிலே இருக்கும் போது ஒரு தரிசனத்தைக் கண்டார்
02. கோதுமையை மீதியானியரின் கைக்கு தப்புவிப்பதற்காய் ஆலைக்கு சமீபமாய் அதைப் போரடித்தவன்
04. இவன் கல்லறையில் போடப்பட்ட மனுஷன் உயிர்த்தெழுந்தான்


**கீழிருந்து மேலாக**

05. பன்னிரண்டு வயதில் இவன் ராஜாவானான்
08. ஆனானியின் வார்த்தையைக் கேட்டு அழுது துக்கித்தவன்
14. தாவீது தன் சத்துருக்களை முறியடித்த ஸ்தலத்திற்கு இவ்வாறு பேரிட்டான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் நல்ல சுகத்தோடு இருக்க இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகின்றேன். தொடர்ந்தும் ஜெபத்தில் தரித்திருங்கள். ஏனெனில் ஜெபத்திற்கு நிச்சயமான பதில் உண்டு. ஆகவே ஜெபிப்பதற்கு சோர்ந்து போகவேண்டாம்.

**நான் எதிர்பார்த்த அன்பு எனக்கு கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தோடு நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கலாம். என்மீது உண்மையான பாசம் யாருக்குமேயில்லை என நீங்கள் சோர்ந்து போய் விட்டீர்களா? பல உறவுகள் உங்களுக்கு இருந்தும் தனித்த வாழ்க்கை வாழ்கின்றீர்களா?**

வேதாகமத்தின் ஆரம்பத்தைப் பாருங்கள். தேவன் முதன் முதலில் ஓர் மனிதனைப் படைத்தார். அவரது பெயர் ஆதாம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆதாமை தேவன் படைக்கும் பொழுது அவருக்கு தாய் - தந்தை பாசத்தையோ, சகோதர சகோதரிகளின் அன்பையோ, நண்பர்கள் - உறவினர்கள் என்ற உறவையோ கொடுத்து அவரை படைக்கவில்லை. மாறாக ஓர் தனி மனிதனாகப் படைத்தார்.

சிந்தித்துப்பாருங்கள்; பரந்து விரிந்த அண்டத்தில் தனிமனிதனாக ஆதாம் நின்றார். பேச்சுத் துணைக்குக் கூட அவருக்கு யாருமே இருக்கவில்லை. ஏன் எல்லாம் அறிந்த தேவன் ஆதாமிற்கு இதனை அனுமதித்தார்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்று தான், இந்த உலகத்தில் எந்த பந்த பாசங்களும் நிரந்தரமில்லை; அத்தியாவசியமில்லை. ஒன்றே நிரந்தரம், ஒன்றே அத்தியாவசியம். அது நம் தேவனின் அன்பும் ஆதரவும் தான்.**

ஆதாமை தேவன் தனியே விடவில்லை. அவனோடு அவர் பேசினார், உலாவினார். அவனுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக அவர் இருந்தார்.

ஆம் அருமையானவர்களே! நீங்கள் தனித்தவர்கள் அல்ல. தேவன் உங்களுக்கு துணையாக இருக்கின்றார். அவர் உங்களுக்கு ஆதரவு கொடுப்பார். அவருடைய அன்பு உங்களுக்கு போதுமானது.

கவலைப்படவேண்டாம். தைரியமாக இருங்கள். அவர் உங்களைப் பெலப்படுத்தி பாதுகாப்பார்.

தொடர்ந்தும் வாலிபர் வளாக செய்தியின் தொடருக்குள் செல்வோம் வாருங்கள்.

ராஜாவாகிய ரெகொபெயாமிற்கு முதியவர்கள் சொன்ன ஆலோசனை; பரம்பரைக் கட்டிலிருந்து வெளியே வருவதற்கான ஆலோசனை அவருக்கு கொடுக்கப்பட்டது. அவர் அதனை ஏற்றுக்கொண்டு செயற்பட்டாரா? இல்லையா? என்பதனை தொடர்ந்து பார்ப்போம் வாருங்கள்.

**1இராஜாக்கள் 12:8 முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையை அவன் தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்து தன் சமுகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனைபண்ணி,**

முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையை அவர் தள்ளிவிட்டார் என வேதம் சொல்கிறது. புத்திமதிகளை செவிசாய்க்காத கடினமான மனிதர்களை தற்காலத்தில் அதிகமாக காணமுடிகிறது. வாழ்க்கை என்பது ஏதோ எமக்கு எப்போதும் இதம் தரும் நறுமணங்களால் நிறைந்தவை அல்ல. அங்கே துர்நாற்றங்களும் உண்டு. எனவே நாற்றங்களுக்குள் நாம் சிக்கிக்கொள்ளாமல் இருக்க வேண்டுமானால் புத்திமதிகள் எங்களுக்குத் தேவை.

**உன் பெற்றோர் சொன்ன நல்ல ஆலோசனைகளை ஒரு போதும் மறந்துவிடாதே.** அதுவே உனக்குப் புகழ்ச்சியாக இருக்கும். இதனை எழுதிக் கொண்டிருக்கும் இந் நாளில் தகப்பனுக்கும், மகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் தகப்பனை மகன் கொலை செய்யும் அளவிற்கு சென்றுள்ளதை அறிந்தேன். பிரியமானவர்களே! உங்கள் பெற்றோருக்கு ஒரு போதும் எதிர்த்து நிற்க வேண்டாம்.

குழந்தைக்கு தாய் பாலூட்டும் போது அவளது இரத்தம்தான் பாலாக மாற்றமடைந்து செல்கின்றது. இப்படிப்பட்ட தாய் உன் மல-சலங்களை, நாற்றங்களை சகித்தே உன்னை வளர்த்துள்ளார். உன் வியாதிக்காக தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து எடுத்து பத்தியம் காத்தவர்தான் உனது அம்மா. மாத்திரமல்ல, எனக்கொரு குழந்தை பிறந்துவிட்டான் என எவ்வளவு ஆனந்தித்திருப்பார் உனது அப்பா. எவ்வளவு கனவுகளுடன் உன்னை அவர் வளர்த்து ஆளாக்கியிருப்பார். இப்படிப்பட்ட தாய் – தகப்பனின் புத்திமதிகளைத் தயவு செய்து தள்ளிவிடவேண்டாம்.

சகோதரியே! உனது கணவரின் சொல்லைக் கேட்டு நடக்கின்றீர்களா? வேதம் சொல்கிறது: **1கொரிந்தியர் 11:3 ...ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும்,....**

**உனக்குச் சமமாக உன் புருஷன் இருந்தாலும் குடும்பம் என வரும் போது கணவனே உனக்குத் தலைவனாக இருக்கின்றான்.** ஆகவே முடிந்தளவு கீழ்ப்படிந்துபோவதே சிறப்பு. தேவையில்லாத சந்தேகங்கள் உன்னை ஆட்கொள்ள விட்டுவிடவேண்டாம். சந்தேகம் என்பது வந்துவிட்டால் குடும்பத்தின் சந்தோஷம் என்பது எங்கோ ஓடி மறைந்துவிடும். மனித இனத்திற்கு சவால் விடக்கூடிய பெரிய பெரிய வியாதிகளையெல்லாம் மனிதன் தனது அறிவாற்றலினால் மேற்கொண்டுவிடுகின்றான். ஆனாலும் சந்தேகம் எனும் வியாதியை போக்கமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறான். இது பாமரர்கள் தொடங்கி படித்தவர்கள் அனைவரையும் ஆட்கொண்டு வருகின்றது.

வாழ்க்கையில் நின்மதி இல்லாதுவிடின் ஒரு நுளம்புக்கடி கூட அணுகுண்டே என்பது போல் வீட்டில் நடக்கும் சிறு சிறு காரியங்களைக் கூட சந்தேகம் பெரிதாக்கிவிடும். கீழ்ப்படியுங்கள், அன்பு காட்டுங்கள். குடும்ப வாழ்க்கை இனிமையாக மாறிவிடும்.

வேதத்தில் பாருங்கள், ஆபிரகாமுடைய மனைவியை அடையும்படி பார்வோன் அவளை தனது அரன்மனைக்குக் கொண்டு சென்றான். ஆபிரகாம் ஒன்றும் செய்ய முடியாதவனாய் அமைதியாகிவிட்டான். நடந்தது என்ன? தேவன் தலையிட்டு சாராயின் மானத்தைக் காப்பாற்றினார்.

**ஆதியாகமம் 12:17 ஆபிராமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார்.**

தேவன் இருக்கின்றவராகவே இருக்கின்றார். எனவே சமாதானமாயிருங்கள். குறிப்பாக ஸ்திரீகள் புருஷனுக்கு அடங்கி இருப்பதற்கு கவனமாக இருக்க வேண்டும்.

ரெகொபெயாமின் சம்பவத்திற்கு வருவோம், முதியோர் கூறியதை ஏன் இவன் ஏற்றுக்கொள்ளவில்லை? ஒருவேளை இவன் தனக்குள் சிந்தித்திருக்கக் கூடும். நான் யார்? எனது அப்பா யார்? நான் ஓர் ராஜ பரம்பரை, இப்படியிருக்க எப்படி நான் தாழ்ந்து போவது? எப்படி என் கௌரவத்தை, தன்மானத்தை குறைக்கும் இந்த ஆலோசனைக்கு செவிசாய்ப்பது? இதனை அவனால் ஏற்றுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவேயில்லை. எனவே அவன் மாற்று வழியை யோசித்தான். அது தான் தன்னுடன் வளர்ந்து தன்னோடு நிற்கின்ற வாலிபர்களை நாடினான்.

ரெகொபெயாமிற்கு முதலாவது முதியவர்கள் புத்தி சொன்னார்கள். இரண்டாவது வாலிபர்கள் புத்தி சொன்னார்கள். **முதியவர்கள் எனும் போது ஆவிக்குரிய ரீதியில் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய அன்பிற்குள் இருப்பவர்கள் எனப்பார்த்தோம்.** இப்பொழுது வாலிபர்கள் எனும் பொழுது **ஆவிக்குரிய ரீதியில் இரட்சிக்கப்படாதவர்கள், மாத்திரமல்ல தேவனுடைய அன்பிற்குள் இல்லாதவர்கள்** என எடுத்துக் கொள்ளலாம்.

இன்று ஆண்டவருடைய பிள்ளைகளில் அனேகர் தேவனுடைய பிள்ளைகளோடு இருப்பதனைப் பார்க்கிலும் ஆண்டவ்ருடைய இரட்சிப்புக்கு வெளியே நிற்பவர்களுடன் தான் அதிகமாய் இருப்பதற்கு வாஞ்சிக்கின்றனர். சில வேளைகளில் இரட்சிக்கப்பட்டவர்களின் ஆலோசனைகளைவிட இரட்சிக்கப்படாதவர்களின் ஆலோசனைகள் மிகச் சிறப்பானதாக காணப்படலாம்.

**லூக்கா 16:8 ...ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தாங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்.**

உண்மையில் ராஜாவுக்கு வாலிபர்கள் சொன்ன ஆலோசனை அதிக புத்திசாலித்தனமாக காணப்பட்டிருக்கலாம். ஆனால் அதன் முடிவு மிகவும் பரிதாபமானதாக அமைந்தது.

இப் பிரபஞ்சத்தில் எவ்வளவு ஞானமும், செல்வாக்கும் நிறைந்த மனிதராக இருந்தாலும் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் ஆளுகைக்குள் இருக்கும் ஓர் ஏழை மனிதனின் புத்திமதிக்கு எதுவும் நிகராக முடியாது.

**பிரசங்கி 9:15 அதிலே ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்; அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான்; ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை.**

ஆம் பிரியமானவர்களே, வெளிப்பிரகாரமான அந்தஸ்து, பட்டம், பதவிகளைப் பார்க்கவேண்டாம். ஏழையாக இருந்தாலும் ஏன் உங்கள் வீட்டில் வேலை செய்யும் உங்கள் வேலையாளாக இருந்தாலும் அவன் தேவனது பிள்ளையாக இருந்தால் அவனது வார்த்தைகளை அசட்டை செய்ய வேண்டாம்.

பாருங்கள்; நாகமான் சீரிய தேசத்தின் படைத்தலைவனாக மாத்திரமல்ல, பெரிய மனுஷனாகவும், பராக்கிரமசாலியாகவும் இருந்தான் என வேதாகமம் கூறுகின்றது. இப்பேர்ப்பட்டவனின் வீட்டில் ஓர் அடிமையாக ஒரு சிறு பெண்பிள்ளை வேலை செய்து கொண்டு வந்தாள். அவள் வேலைக்காரியாக, சிறுமியாக இருந்தாலும் அவள் ஓர் தேவபிள்ளை. மாத்திரமல்ல விசுவாசத்தில் வல்லவளாகவும் இருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகமானிற்கு மிகப்பிரபல்யம் வாய்ந்தவர்கள் எல்லாம் வழிகாட்டியிருக்கலாம். ஆனால் எதுவும் அவனுக்கு தீர்வைக் கொண்டு வரமுடியவில்லை. ஆனாலும் சிறுமியாக, அடிமையாக இருந்தாலும் அவளின் சொல்லைக் கேட்டு நாகமான் நடந்தபடியினால் தன் வியாதியில் இருந்து சுகம் பெற்றது மட்டுமல்லாமல் உண்மை தெய்வத்தையும் கண்டு கொண்டார்.

ஆம்! தன் வீட்டிலுள்ள சிறு அடிமைப்பெண்ணின் சொல்லையும் கவனித்து செயல்படும் அளவிற்கு நாகமான் நற்பண்புள்ளவராக இருந்தார்.

**வயதை, தொழிலை வைத்து தேவ பிள்ளைகளை கணிக்க வேண்டாம். தேவனுடைய பிள்ளைகளிற்கு இணையாக இப் பிரபஞ்சத்தில் யாரையும் காணமுடியாது.**

இன்னும் பாருங்கள்;

**அப்போஸ்தலர் 27:11 நூற்றுக்கு அதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்.**

கடலினையும் அதன் கால சூழ்நிலைகளையும் மாலுமியும், கப்பல் எஜமானும் அதிகமாக அறிந்திருந்தனர் என்பது உண்மை தான். எனினும் கைதிகளில் ஓர் கைதியைப் போல் நின்ற பவுலிற்கு எல்லா சிருஷ்டிப்பிற்கும் காரணராகிய கர்த்தரைக் குறித்த அறிவு இருந்தது. எனவே தேவன் தனக்கு வெளிப்படுத்தியதை பவுல் அவர்களிற்கு வெளிப்படுத்துகின்றார். ஆனால் அவர்கள் கர்த்தரின் ஊழியக்காரரின் சொற்களை அலட்சியப்படுத்தினார்கள். தாங்கள் திட்டமிட்டதே மிகவும் சிறப்பானது என நினைத்தார்கள். ஆனால் சொற்ப நேரத்திற்குள்ளேயே அவர்களது திட்டங்கள் அனைத்தும் வீணாகிப் போனது. எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

பிரியமானவர்களே! குறிப்பாக கர்த்தருக்கு உண்மையாக ஊழியம் செய்யும் ஊழியர்களின் ஆலோசனைகளைத் தட்ட வேண்டாம். அது உங்களுக்கு ஒத்துவராது போல் காணப்பட்டாலும் அதற்கு செவி கொடுங்கள். தேவ சமூகத்தில் உறவாடுகின்ற தேவ பிள்ளைகளோடு ஐக்கியமாக உள்ள உறவினைப் போல் மேன்மையான ஐக்கிய உறவு இவ் உலகினில் இல்லவே இல்லை. எனவே தேவ ஜனங்களோடு ஐக்கியமாக இருங்கள்.

முதியோரின் ஆலோசனையின்படி நடக்க முடியாத ரெகொபெயாம் வாலிபர்களை நாடினான். அவர்கள் அவனிற்கு எப்படிப்பட்ட புத்திமதி சொன்னார்கள் என்பதனை இவ் வசனம் கூறுகின்றது.

**1இராஜாக்கள் 12:11 இப்போதும் என் தகப்பன் பாரமான நுகத்தை உங்கள்மேல் வைத்தார்; நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன், என்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார்; நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று நீர் அவர்களோடே சொல்ல வேண்டும் என்றார்கள்.**

ரெகொபெயாமின் உணர்வுகளைத் தூண்டத்தக்க வசனங்களைப் பயன் படுத்தி இளைஞர்கள் அவனிற்கு ஆலோசனைகளை கொடுத்தார்கள். ரெகொ பெயாமின் உணர்வுகள் தூண்டப்பட்டது.

உண்மையில் இன்றைய காலத்திலும் உணர்வுகளைத் தூண்டத்தக்க அனேக சம்பவங்கள் உலகத்திலும், ஏன் எழுதுவதற்கு வேதனையும் நடுக்கமுமாக உள்ளது. திருச்சபைகளுக்குள்ளும் அது இடம்பெற்று வருகின்றது. உணர்வுகளைத் தூண்டும் பாடல்கள், வீர வசனங்கள், அசுத்த காட்சிகளால் இவ் உலகம் நிறைந்துள்ளது.

அன்பு, பாசம், பற்று போன்ற பல உணர்வுபூர்வமான பிணைப்புகளுடன் நாம் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றோம். இருப்பினும் எமது உணர்வுகள் பிழையான நோக்கத்திற்காக தூண்டப்படாதபடிக்கு நம்மை நாமே பாதுகாக்க வேண்டும். ஓர் போதும் நாம் உணர்ச்சிவசப்படாதபடிக்கு காணப்படுவோமாக.

குறிப்பாக வாலிபப் பிராயாத்தில் உணர்ச்சிகளின் வேகம் மும்முரமாக இருக்கும். இவ் உணர்ச்சிகள் எல்லை மீறி செயற்படாதபடிக்கு காணப்படவேண்டு மானால் பின்வரும் வேதாகம வசனங்களை கைக்கொள்வது அவசியமாகும்.

**நீதிமொழிகள் 7:1-4 (1.) என் மகனே, நீ என் வார்த்தைகளைக் காத்து, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து. 2. என் கட்டளைகளையும் என் போதகத்தையும் உன் கண்மணியைப்போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய். 3. அவைகளை உன் விரல்களில் கட்டி, அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள். 4. இச்சகவார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கிக் காப்பதற்காக,**

உணர்ச்சிகளைக் கிளறுகின்ற வார்த்தைகளில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கவேண்டுமென்றால் தேவனுடைய வார்த்தைகளால் எமது இருதயத்தை நிரப்ப வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளால் எவ்வளவுக்கு எமது இருதயங்களை நிரப்புகின்றோமோ அவ்வளவுக்கு உலக வல்லமைகளில் இருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

யோசேப்பு எனும் வாலிபனின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய வகையில் போர்த்திபாரின் மனைவி பேசினாள்.

**ஆதியாகமம் 39:12 அப்பொழுது அவள் அவனுடைய வஸ்திரத்தைப் பற்றிப் பிடித்து, என்னோடே சயனி என்றாள். அவனோ தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனான்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே யாரும் கண்டுபிடிக்க முடியாத சிற்றின்ப வாழ்க்கை யோசேப்பைத் தேடிவந்தது. 'என்னோடே சயனி' என்ற வார்த்தை யோசேப்பின் உணர்வுகளை எவ்வளவாகத் தூண்டி இருக்கும்.

ஆனால் யோசேப்போ தேவன் தன்னை எப்பொழுதும் காண்கின்றார் என்ற உணர்வோடு தேவ பிரசன்னத்தால் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தமையால் அந்த பாவத்தை வெறுத்து தள்ளியதும் அல்லாமல் அப் பாவத்தை ஜெயித்தார். உணர்வுகளைத் தூண்டும் வார்த்தைகளை ஜெயித்தார்.

உணர்ச்சி ததும்பும் வார்த்தைகளிற்கு செவிகொடுத்து தன் உடல் இன்பத்தை அனுபவிப்பதைவிட, தேவனை பிரியப்படுத்தி வாழ்வதே அவருக்கு முக்கியமானதாக இருந்தது.

பிரியமானவர்களே இன்றைக்கு எமது வாழ்க்கை எப்படியிருக்கின்றது? நாங்கள் என்னத்தை செய்தாலும் தேவன் காண்கிறார் என்ற உணர்வோடு வாழ்க்கை நடத்துவதே மிக நல்லது.

நம்மைப் பற்றி நாம் அறிந்தவற்றைவிட அதிகமாகவும் மிக நுட்பமாகவும் கர்த்தர் நம்மைப் பற்றி அறிந்திருக்கின்றார். உதாரணமாக, நமது நினைவுகளை எந்த மனிதனாலும் அறிய முடியாது. **ஏன் நம் வாயில் சொல் பிறவாததற்கு முன்பு அதை நாம் கூட பலவேளைகளில் அறியமாட்டோம். ஆனால் கர்த்தரோ அதையெல்லாம் அறிவார்.**

சிந்தித்துப்பாருங்கள்; எமக்குள் தோன்றுகின்ற பல நினைவுகளை நாம் மற்றவர்களிடம் சொல்ல வெட்கப்படுகின்றோம். பலவேளைகளில் பயப்படுகின்றோம். ஆனால் நமது நினைவுகளை கர்த்தர் அறிந்திருக்கிறார் என்பதே நிதர்சனமான உண்மையாகும். ஆகவே நமது சிந்தனைகள், உணர்வுகளைக் குறித்து மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அடிக்கடி உணர்வுகள் சிதைவடைந்து சிந்தனையில் அசுத்தங்கள் நுழைவது வழமையான விடயம் தான். ஆனால் நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால் இவ்வித உணர்வுக் குழப்பங்கள் வரும்பொழுது உடனடியாக அவற்றை உதறித்தள்ளிவிட்டு வெளியே வரவேண்டும். தொடர்ந்தும் அக் குழப்பங்கள் வருமானால் உள்ளத்தில் ஜெபித்து, துதித்து வெளியே வரவேண்டும். உடனடியாக உணர்வுக் குழப்பங்களில் இருந்து வெளியே வரவேண்டும். அதுவே வெற்றி வாழ்க்கையின் அடையாளமாகும்.

ஆனால் உலக மனிதர்களோ அதற்கு மாறாக உணர்ச்சிக் கிளர்ச்சிகளில் சிக்கி அச் சிந்தனைகளை விரும்பி அந்த சாக்கடைக்குள்ளே உழன்று கொண்டிருப்பார்கள். எமது உணர்வுகளைக் குறித்து சிந்திக்கின்ற நேரம் இதுவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா!

திருமதி. J.பிலிப்

இயேசு கிறிஸ்துவின் நமாத்தில் வாழ்த்துக்கள். தேவ கிருபையினால் இவ் வருடத்தின் எட்டு மாதங்களைக் கடக்க கர்த்தர் கிருபை செய்தார்.

## 01. நம் தேவன் அதிசயமானவர்



அதிசயம் என்றால் என்ன? நாம் நம்முடைய வாழ்க்கையில் இந்த காரியம் நடக்குமா? என்று நினைக்கும் போது, நம் **தேவன் நாம் நினைத்து பார்க்க முடியாத காரியங்களை நமக்குச் செய்வார்.** மனோவாவின் மனைவி பிள்ளை பெறாத மலடியாயிருந்தாள். ஒரு நாள் கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்கு தரிசனமாகி அவளை நோக்கி; இதோ பிள்ளை பெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய் என்றார். (நியாயாதிபதிகள் 13:2-7). ஸ்திரீயானவள் தன் புருஷனிடத்தில் வந்து ஒருவர் என்னிடத்தில் வந்தார். அவருடைய சாயல் தேனுடைய தூதனின் சாயலைப் போல மகா பயங்கரமாயிருந்தது. அவர் என்னை நோக்கி, தீட்டானது ஒன்றும் புசியாதிருப்பாயாக என்று எச்சரித்து வாக்குறுதி கொடுத்தார் என்றாள். உடனே மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். தேவன் மனோவாவின் சந்தத்திற்கு செவி கொடுத்தார். மீண்டும் கர்த்தருடைய தூதனாவர் மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் தரிசனமாகி ஸ்திரீக்கு சொன்ன யாவற்றிற்கும் அவள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றார்.

மனோவா அவரைப் பார்த்து உம்முடைய நாமம் என்ன என்று கேட்ட போது **'அது அதிசயம்'** என்றார். மனோவா ஓடிச்சென்று வெள்ளாட்டுக்குட்டியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஜனபலியையும் கொண்டு வந்து அதைக் கன்மலையின் மேல் கர்த்தருக்குச் செலுத்தினான். அப்பொழுது வானத்திலிருந்து அக்கினி இறங்கியது. மனோவாவும் அவர் மனைவியும் பார்த்துக் கொண்டிருக்கையில் அதிசயம் விளங்கியது. அவர்கள் செலுத்திய பலியை ஏற்றுக்கொண்டது.

**உன் வாழ்க்கையிலும் அதிசயமான தேவன் அதிசயம் செய்வார்.** நீ செய்ய வேண்டியது அவருடைய எச்சரிப்பின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நடப்பாயானால் உன் வாழ்க்கையிலும் 'அதிசயமான' காரியங்கள் நடைபெறும்.

## 02. ஆலோசனைக் கர்த்தர்

இயேசுவும் அவருடைய சீஷரும் திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சை ரசம் குறைவுபட்ட போது இயேசுவின் தாயார் வேலைக்காரரை நோக்கி அவர் **உங்களுக்கு என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுங்கள் என்று ஆலோசனை கொடுத்தார்.** அந்த ஆலோசனைப்படி நடந்தபடியால் திருமண வீட்டில் ஒரு அவமானம் ஏற்பட வேண்டிய நேரத்தில் எல்லாரும் ஆச்சரியப்படக் கூடியதாக ஒரு அற்புதம் நடந்தது. சகோதரியே உன்னுடைய வாழ்க்கையில் அற்புதம் நடக்க வேண்டுமானால் நீ செய்ய வேண்டியது உன் தேவனின் **ஆலோசனைப்படி நடக்க வேண்டும்.**

**சங்கீதம் 32:8 நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.** சகோதரியே தேவனின் ஆலோசனைப்படி நடந்தால் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

## 03. வல்லமையுள்ள தேவன்

சகோதரியே அநேக நேரங்களில் நம் தேவனின் வல்லமையை நாம் நினைக்காமல் போகின்றோம். நம் தேவன் எல்லாவற்றையும் செய்ய வல்லமையுள்ளவர். **லூக்கா 8:45-46 (45.) அப்பொழுது இயேசு: என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்னபோது, பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும்: ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே, என்னைத் தொட்டது யார் என்று எப்படிக் கேட்கிறீர் என்றார்கள். 46. அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்.**

தேவனின் வல்லமை உன்னைத் தொடவேண்டும் என்று விரும்புகின்றாயா? அந்த ஸ்திரீயைப் போல இயேசுவின் பின்பதாகச் செல்கின்றாயா? அல்லது இயேசுவுக்கு முன்பாக நடக்கின்றாயா? வல்லமை உன்னைத் தொடவேண்டுமானால் **இயேசுவின் வார்த்தையின்படி நடந்தால் அவரின்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வல்லமை புறப்பட்டு உன்னிடம் வரும்.** அப்போது ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்வாய்.

## 04. நித்தியபிதா

**உபாகமம் 33:27 அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்.** சகோதரியே உனக்கு அடைக்கலம் இல்லை என்று பயப்படுகிற பயம் வேண்டாம். நித்திய பிதாவே உனக்கு அடைக்கலம்.


## 05. சமாதான பிரபு

**மத்தேயு 5:9 சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.**

பாவியாகிய ஒரு ஸ்திரீ இயேசுவின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு அவருடைய பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்து தன் தலைமயிரினால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து பரிமள தைலத்தைப் பூசினாள். இதைக்கண்ட பரிசேயன் இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். ஆனால் இயேசு ஸ்திரீயை நோக்கி உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ என்றார்.

இதை வாசிக்கும் சகோதரியே உன்னுடைய வாழ்க்கையில் சமாதானம் இல்லையே என்று யோசிக்கின்றாயா? சமாதானப்பிரபுவாகிய இயேசுவண்டை வா! அவர் உனக்கு சமாதானத்தை கட்டளையிடுவார். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்.

தேவனுடைய வார்த்தையின்படி நீ நடப்பாயானால் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபுவாகிய ஆண்டவர் உன்னை வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பாப் பியர்ஸ்
## 1914 - 1976

## உலகிற்கு உணவு

இரண்டாம் உலகப்போர் நடந்து முடிந்த சமயம் அது. அநேகர் கொலையும், குற்றுயிருமாக விடப்பட்டனர். ஆதரிப்பதற்கும், அரவணைப்பதற்கும் ஆட்கள் இல்லை. துக்கத்திலும், துயரத்திலும் ஆழ்ந்த வர்க்கு மகிழ்ச்சியின் செய்தி கொடுக்கப்படவில்லை. பஞ்சமும், பசியும் தலை விரித்தாடியது.

சிறு குழந்தைகள் உண்ண உணவின்றி அங்கும் இங்கும் அலைந்து திரிந்தன. அவர்களைத் தத்தெடுத்து அரவணைக்க வந்தது ஒரு நிறுவனம். ஜெர்மானிய சகோதரிகளால், திபெத்திய எல்லைகளில் அந்த ஆதரவற்ற குழந்தைகளின் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.

பாப் பியர்ஸ் அவ்வில்லத்தைப் பார்வையிட அங்கு சென்றார். சின்னஞ்சிறிய குழந்தை ஒன்று உண்ண உணவு கிடைக்காமல், கையில் வெறும் தட்டுடன் ஏங்கிக் கொண்டிருந்தது. பாப் பியர்ஸ், சகோதரி ஒருவரை அழைத்து, 'ஏன் அவளுக்கு உணவு கொடுக்கப்படவில்லை' என்று வினவினார். அதற்கு அவர்கள் உணவு தீர்ந்துவிட்டதாகக் கூறினார்கள்.

அதற்கு பியர்ஸ் 'ஏன் சிறிது கொடுக்கலாமே' என்று கேட்டார். அதற்கு அவ்வம்மையாரோ 'இதற்காக உங்களால் என்ன செய்ய முடியும்?' என்று மிகுந்த ஆவலோடு கேட்டார்கள். இக் கேள்வியால் அவரின் உள்ளம் உடைந்தது. பசியால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் வருந்தக்கூடாது என்ற நோக்கத்துடன், 1950ஆம் ஆண்டு World Vision என்ற அமைப்பினை ஆரம்பித்தார். பின்னர், இது Samaritan Purse என்றும் அழைக்கப்பட்டது.

ஆயிரமாயிரம் குழந்தைகளுக்கு இன்றும் இதன் மூலம் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கும், ஓரங்கட்டப்பட்டவர்களுக்கும், ஒன்றுமே இல்லாதவர்களுக்கும் உணவும், உடையும், மருத்துவ உதவிகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆறு கண்டங்களில் இதன் பணிகள் அதிசயமாக நடைபெற்று வருகின்றன. வாரி வழங்கும் உள்ளங்களால் மக்கள் வாழ்வு பெறுகின்றனர்.

அனைத்திற்கும் மேலாக கிறிஸ்துவின் அன்பு இங்கு செயலில் காட்டப்படுகிறது. பாப் பியர்ஸ் ஒருவர் உருவானதினால் இன்று ஆயிரக்கணக்கான பாப் பியர்ஸ்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

**அன்பரே! உங்களால் பிறருக்கு என்ன உதவிகள் செய்யக்கூடும்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கடவுளின் இருதயத்தை உடைக்கும் செயல்கள் என் இருயத்தையும் உடைக்கட்டும் — பாப் பியர்ஸ்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" செப்டெம்பர் 22**

# அலெக்ஸாண்டர் டஃப்

## 1806 - 1878



## சுவிசேஷ சுடராய் பற்றியெரிவோம்

பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பம். இந்தியாவின் வங்காள மாநிலம் கிறிஸ்துவை அறியும் வாய்ப்பினைப் பெற்றது. பல மிஷனெரிகள் வங்காளத்தை உயிர்மீட்சி அடையச்செய்தனர்.

கியாந்தர், ரிங்கல் தௌபே, வில்லியம் கேரி, மார்ஷ்மென், வார்டு ஆகியோர் வரிசையில் சிறப்பிடம் பெறுபவர் கனம் அலெக்ஸாண்டர் டஃப்.

ஸ்காட்லாந்து நாட்டிலிருந்து இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்தவர். வரும் வழியில் இருமுறை அவரும் அவரது மனைவியும் கப்பல் சேதத்தினின்று தப்பினார்கள். பின்னர் பல இன்னல்களுக்குட்பட்டு 1830ஆம் ஆண்டு கல்கத்தா வந்து இறங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சொற்திறனும், எதையும் சாதிப்பதற்கான ஆற்றலும் படைத்தவர். வங்காள மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எண்ணி, கல்லூரி ஒன்றை 1830ஆம் ஆண்டு ஆரம்பித்தார். ஆனால் அக்கல்லூரி திறக்கப்பட்ட போது வெறும் ஐந்து மாணவர்களே வந்து சேர்ந்தனர்.

அலெக்ஸாண்டர் டஃபின் அயராத உழைப்பினால் 300 மாணவர்கள் கல்லூரியில் இணைந்தனர். டஃப் பலவிதக் கலைகளையும், ஆங்கிலம் மூலம் அவர்களுக்கு கற்பித்தார். மக்கள் கல்வியில் முன்னேற்றமடைந்ததால் தங்கள் சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை மறையச் செய்தனர். உடன்கட்டை ஏறுதலின் கொடூரமும், குழந்தைப் பருவ விவாகமும் விடைபெற்றன. நற்செயல்கள் அனைத்தும் சரியான முறையில் நடைபெற்றன.

ஆங்கிலத்தில் கிறிஸ்தவ நற்செய்திக்கூட்டங்களை டஃப் ஆரம்பித்து, அநேகரை கிறிஸ்தவ போதனையில் வளரச் செய்தார். இதனால் வங்காளத்தில் புது யுகம் தோன்றியது.

**அன்பரே! அறியாமை என்னும் இருளை அகற்ற உங்களைப் போன்ற அர்ப்பணிப்புள்ளோர் தேவையல்லவா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: பற்றியெரியும் பக்தி இல்லாத ஒரு சீடனை, மன்னிக்கவே முடியாது. — மேக் டொனால்டு**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 12**


---

## வினாவிடை 116

### சரியான பதில்கள்

01. அர்தசஷ்டா (எஸ்றா 7:18)
02. பாபிலோனின் விக்கிரகங்கள் நொறுங்கிப்போயின என்று (எரேமியா 50:2)
03. அப்போஸ்தலனாகிய பேதுரு (1பேதுரு 2:14)
04. மனுஷன் (சங்கீதம் 103:15)
05. சுவரில் எழுதிய கையுறுப்பை கண்டபோது (தானியேல் 5:6)
06. யோவான் (1யோவான் 2:17)
07. கர்த்தர் (எரேமியா 15:11)
08. யாக்கோபு (ஆதியாகமம் 28:20-22)
09. தீத்து (11கொரிந்தியர் 8:18-23, 12:18)
10. ஆறு புருஷர் (தேவதூதர்) (எசேக்கியேல் 9:2-3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வேதநாயகம் மகாராஜா




ஆண்டவருக்குரிய அர்ப்பணிப்பின் மூன்று பகுதிகளைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம். ஒரு கிறிஸ்தவன் வித்தியாசமான சந்தர்ப்பங்களில் அர்ப்பணிப்பின் காரியத்தில் பூரணமாய் வெற்றிபெற வேண்டும். அர்ப்பணிப்பை அறியாமல்விட்டு நழுவுகிற சந்தர்ப்பங்கள்கூட வரமுடியும், என்றாலும் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திலே அதை நாங்கள் செய்ய வேண்டும். நாம் அர்ப்பணிக்கப்பட்ட அர்ப்பணிப்பில் உறுதியாய் இருக்க வேண்டும்.

## 01. இல்லற வாழ்வுக்கான அர்ப்பணிப்பு

இதனை ஆதாமுடைய வாழ்க்கையை வைத்து பார்க்க முடியும். **ஆதியாகமம் 2:18 பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.** இது தேவனுடைய இருதயத்திலே தோன்றியது. ஒவ்வொரு மனிதனுடைய தனிப்பட்ட காரியத்தைக் குறித்தும், தேவைகளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தும் அக்கறை தேவனுக்கு உண்டு. அப்படி சித்தம் கொண்ட ஆண்டவர் என்ன செய்கிறார் என்றால்: **ஆதியாகமம் 2:21 அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.** ஆதாமுக்கு ஏற்ற துணை இன்னும் இல்லை. அதை உண்டாக்குவேன் என்று தேவன் யோசித்துவிட்டார். அதிகமானோர் சொல்வார்கள்: ஆண்டவர் எல்லாவற்றையும் உருவாக்கிவிட்டு மனிதனை மாத்திரம் மண்ணினால் உருவாக்கினார் என்று. அது தவறு.

**ஆதியாகமம் 2:19 தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார். அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப்பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று.** எல்லாவற்றிற்கும் ஆதாம்தான் பெயர் வைத்தான். நான் நினைக்கிறேன், ஆதாம் சிறந்த அறிவாளி என்று. நாம் ஒரு குழந்தையை பெற்றெடுத்துவிட்டு பெயர் வைப்பதற்கு கஷ்ரப்படுவோம். ஆனால் ஆதாம் தேவன் கொண்டு வரவர பெயர் வைக்கிறான். இப்போதும் அவனுக்கு துணை இல்லாமல் இருந்தது. ஆனாலும் அவன் தவறான முடிவுக்கு செல்லவில்லை. அவனுக்கு தெரியும், எனக்குரிய துணை வேண்டுமென்றால் நான் தேவனிடம் என்னை அர்ப்பணிக்க வேண்டும். இது ஒரு வித்தியாசமான காரியம் என்று நீங்கள் யோசிக்க முடியும். அனால் அது சத்தியத்தின்படி உண்மை. எப்படியென்றால் இவன் தனக்கென்று குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்க முதல், தனக்கென்று துணையைப் பெற்றுக் கொள்ள முதல் தேவனிடம் தன்னை அர்ப்பணித்தான்.

திருமணம் என்பது தியாகத்தோடு ஆரம்பிப்பது, திருமணம் என்பது அர்ப்பணிப்போடு காத்திருந்து துணையை பெற்றுக் கொள்வது. ஆதாம் தேவனிடம் தன்னை அர்ப்பணிப்போடு கொடுத்தான். தேவன் பெரிய ஒரு சத்திரசிகிச்சை செய்தார். அவன் தன்னுடைய விலா எலும்பை தேவன் எடுக்கவிடுகிறானென்றால் அது ஒரு தியாகம். உண்மையான, தூய்மையான, சிறந்த, தேவனால் உருவாக்கப்படுகிற குடும்ப வாழ்க்கைக்கு எதிர்பார்த்து காத்திருப்பவர்கள் தங்களை தேவனிடம் அர்ப்பணிக்க வேண்டும். அர்ப்பணிப்போடு ஆரம்பிப்பது தான் தேவன் எதிர்பார்க்கிற சிறப்பான குடும்ப வாழ்க்கை.

வாலிபர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்: உங்கள் வாழ்க்கையில் இதை அர்ப்பணிப்போடு செய்யுங்கள். ஒரு அறிஞர் கூறினார்: திருமணமான ஆரம்பத்தில் நாம் இருவரும் ஒருவர் என்று சொல்வார்கள். ஐந்து வருடங்களுக்கு பின் ஒருவர் முன்னுக்கும் மற்றவர் பின்னுக்கும் செல்வார்கள் பிற்பாடு இருவருக்கும் இடையில் பெரிதான இடைவெளி விட்டுச்செல்வார்கள். குடும்ப வாழ்க்கை என்பது பஞ்சு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தை போன்ற வாழ்க்கை அல்ல. அது நாள் செல்ல செல்ல பிரச்சினைகளுக்கு, துன்பங்களுக்கு, பெலவீனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய பாதை. நீங்கள் ஆணாக இருக்கலாம், பெண்ணாக இருக்கலாம். ஆனால் தேவனுக்கு பிரியமான குடும்பவாழ்க்கையை ஸ்தாபிக்க வேண்டுமென்றால் உங்களுடைய வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணியுங்கள். அர்ப்பணிப்போடு ஆரம்பிப்பது தான் ஒரு உண்மையான இல்லறம். இதைவிட்டு வழிவிலகினால் தேவனுடைய வார்த்தையை விட்டு விலகிய செயலாகும். ஆதாம் ஆண்டவருக்கு அனுமதி கொடுத்தான். ஆண்டவரே அவனிடம் இருந்து விலா எலும்பை எடுத்து அவனுக்கு துணையை உருவாக்கிக் கொடுத்தார். இந்த அர்ப்பணிப்பு வாழ்வு முழுவதும் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

## 02. எங்களுடைய ஆராதனை வாழ்வில் வருகிற அர்ப்பணிப்பு

ஆராதனை வாழ்வின் அர்ப்பணத்திற்கு நாம் எல்லோரும் வேதத்தில் பொதுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய மனிதன் ஆபிரகாம். ஆண்டவரை பிரியப்படுத்த வேண்டும், ஆண்டவருக்கு பிரியமாக வாழவேண்டுமென்றால் எங்களை ஆண்டவரிடம் அர்ப்பணிக்க வேண்டும். **ரோமர் 12:1 அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.** ஜீவபலியாக எம்மை அர்ப்பணிப்பது தான் ஆராதனை. இன்றைக்கு நாம்; ஒரு பாட்டை பாடுவோம், சிறிது நேரம் துதிப்போம், ஆண்டவருக்கு நன்றி சொல்வோம் பின்னர் வீட்டிற்கு சென்றுவிடுவோம். அது தான் ஆராதனை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி எம்மை அர்ப்பணிப்பது தான் ஆராதனை.

**ஆதியாகமம் 22:1-3 (1.) இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான். 2. அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகன பலியாகப் பலியிடு என்றார். 3. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின் மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகன பலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான்.** தேவன் சொல்கிறபடி எங்கள் வாழ்வை மாற்றுவது ஆராதனை. இந்த பகுதியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறப்பான ஆராதனையின் பகுதி என்று வேத அறிஞர்கள் சொல்கிறார்கள்.

எனவே எந்தவிதமான குறுக்கீடும் அற்ற அர்ப்பணிப்பு இங்கு இருந்தது. ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளுக்கே இதனை சொல்லடிவில்லை. அதற்காக உங்களுடைய குடும்பத்தின் காரியங்களை மனைவிக்கு சொல்லக் கூடாது என்று சொல்லவில்லை. இதனை பிழையாக விளங்கிக் கொள்ளக் கூடாது. ஆனால் ஆராதனை வாழ்வு குழம்பாது இருக்க வேண்டும் என்பதற் குரிய நடைமுறை தேவன் சொன்னதை செய்வதற்கு குறுக்கீடு வரக்கூடாது. அது அன்புக்குரியவர்களாக, பாசத்திற்குரிய வர்களாக இருக்கலாம். யாரும் ஆண்டவர் சொன்னதை தடுக்கக்கூடாது என்பதற் காக ஆபிரகாம் யோசித்து யாருக்கும் சொல்லாமல் போனான். சாராளுக்கு சொல்லப்பட்டதாக வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. தேவனுடைய ஆராதனை எதனாலும் தடுக்க முடியாத ஒன்றாக இருக்க வேண்டும். ஆபிரகாம் தேவன் சொன்ன வார்த்தையை நிறை வேற்றுவதற்காக தன்னுடைய நேசத் திற்கு, பாசத்திற்குரிய சாராளுக்கு கூட சொல்லவில்லை என்றால் அவன் முதலாவது தேவனை நேசித்தான்.

ஆபிரகாமுக்கு ஏற்பட்ட வேதனை நாம் கதைத்துவிட்டு போகிறதைப் போன்று சிறிய வேதனை அல்ல. ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்பண்ணி இருபத்தைந்து வருடங்களுக்கு பின்பு தான் ஈசாக்கு பிறந்தான். அவனை பலியிடும்படி தேவன் கூறிய போது ஏறத்தாள ஈசாக்கிற்கு 19 வயது.

இங்கே 19 வயதிலே இருக்கும் தன் மகனை தகப்பனே பலியிடவேண்டும் என்ற நோக்கத்தோடு செல்கிற போது ஆபிரகாமின் உள்ளம் எப்படி இருந் திருக்கும். ஆனால் அவன் தான் செய்யப்போகிற தியாகம், அர்ப்பணிப் பிற்கிடையில் எந்த தடையும் வரக்கூடாது என்று வேலைக்காரனையும் விட்டுச் செல்கிறான்.

**ஆதியாகமம் 22:5 அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டா னும் அவ்விடமட்டும்போய், தொழுது கொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான்.** வேலைக்காரனை கொண்டு சென்றிருந்தால் எல்லாம் மாறிநடைபெற்றிருக்கும். அவனுக்கு தெரியும், தேவன் கூறிய இந்த பகுதியில் மாற்றம் வரக்கூடாது என்று. ஆபிரகாம் இந்த துன்பத்தை தானே சுமக்க வேண்டும் என்பதை தன்னுடைய இருதயத்திலே தெரிந்து கொண்டான். **உண்மையான ஆராதனையிலே தேவன் எங்களுடைய வாழ்வைப் பார்த்து எங்களை நுகர்ந்து கொள் வார். கர்த்தரை மகிழ்விப்பது தான் ஆராதனை.** வெட்ட வேண்டிய மகனை யும், கத்தி, நெருப்பு எல்லாவற்றையும் கொண்டு தானே செல்கிறான். அது ஒரு தாங்க முடியாத துக்கம், வியாகுலம், அந்த வியாகுலத்தை தேவனுக்காக செய்து நிறைவேற்றும்படியாக அவன் அணிமித்து சென்றான்.

நெருப்பு உள்ள பாத்திரத்திற்குள் சாம்பிராணியை இடும்போது சாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணியை நெருப்பு எரித்து உருக்கும் போது சுகந்தவாசனை ஒன்று அதில் இருந்து வெளிப்படும். அது நெருப்பிற் குள்ளே சென்று தன்னை இழக்கிற போது, தாங்க முடியாத துன்பத்தை அது தாங்குகிற போது அதனிடத்திலிருந்து வருகிற வாசனை போன்று எங்களு டைய வாழ்வில் வருகிற துன்பம், வேதனை, வியாகுலம் ஆகியவற்றை வேத வார்த்தையின்படி நானும் நீங்களும் காத்துக்கொள்வோமென் றால், தேவன் அனுமதிக்கிற துன்பத்தை ஏற்றுக் கொள்வோமென்றால் எங்களால் தாங்கமுடியாத வேதனைகளை சுமந்து செல்வோமாக இருந்தால் எங்கள் வாழ்வில் இருந்து சுகந்த வாசனையை தேவன் ஏற்றுக்கொள்வார். ஆராதனை என்பது சந்தோஷமாக இருக்கும் போது நன்றி என்று சொல்வதைவிட, **தேவன் அனுமதிக்கிற துன்பத்தின் வாழ்க் கையை, வியாதியின் வேதனையின் பகுதிகளை, கொடுமையின் பகுதி களை சகித்து ஆண்டவருக்கு எப்படி பிரியமாக வாழலாம் என்று** பார்த்து **வாழ்கிற வாழ்க்கை.**

உங்கள் வாழ்க்கையில் எந்த பகுதி யில் நீங்கள் வெந்துபோயிருக்கிறீர்கள்? எல்லோருக்கும் ஒரு துன்பம் இருக்கி றது. தேவன் அதை உங்களுக்கு அனுமதித்திருக்கிறார். தேவன் அனு மதித்த துன்பத்தை ஒரு போதும் கால்களால் தட்டிவிட வேண்டாம், அதனை உதாசீனப்படுத்த வேண்டாம். ஏனென் றால் **அதற்குள் இருந்து தேவன் சுகந்த வாசனையை ஏற்றுக்கொண் டிருக்கிறார்.** ஆபிரகாம் தனிமையாக யாருக்கும் சொல்லாமல் தேவன் மகிழத்தக்க ஒரு செயலை செய்தான். உங்கள் வாழ்வில் வருகிற துன்பங் களை ஓடி ஓடி எல்லோருக்கும் சொல்ல வேண்டும் என்று நினைக்காமல், தேவன் என்னுடைய வாழ்வில் அனுமதித்த துன்பத்தை நான் தாங்கி, சகித்து அதனிடத்திலிருந்து வருகிற சுகந்த வாசனையை தேவன் ஏற்றுக் கொள்ளும் படியாக நான் வாழ வேண்டும் என்ற முடிவிற்குள் வாருங்கள். அது கர்த்தரை பிரியப்படுத்தும். உங்களுக்கு துன்பத் தின் வாழ்வை கர்த்தர் அனுமதித் திருக்கிறார் என்றால் அது அவருடைய நாமம் மகிமைப்படுவதற்காகத்தான். யாருக்கும் சொல்ல முடியாத துன்பம் உங்களுக்குள்ளே வைத்திருக்கிறீர் களா? கர்த் தருக்கு ஸ்தோத்திரம்! உங்கள் வாழ்க்கையில் இருந்து கர்த்தர் சிறப்பான ஆராதனையை கண்டு கொண்டிருக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொன் னான்: தன்னை ஜீவ பலியாக வார்க்கி றேன் என்று. ஜீவபலி என்பது உயிரோடு இருக்கிற போது ஆண்டவர் கூறிய வார்த்தைகளின்படி, அர்ப்பணிப்புடன் வாழ்க்கையை வாழ்வதாகும். நான் பல துன்பங்கள் வந்த போது பதறியிருக்கி றேன், அந்த நாட்களில் இந்த சத்தி யங்கள் எனக்குப்புரியவில்லை. ஆனால் துன்பங்கள் வருகிற போது அதை தேவனுக்குரிய ஒரு ஆராதனையாக மாற்ற முடியும் என்பதை தேவ ஆவியானவர் என்னோடு பேசினார். தேவனுடைய நீதிக்காய், பரிசுத்தத்திற் காய், தேவன் சொன்ன சொல்லுக்காய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய வாழ்வை அர்ப்பணிப்போம் என்றால் அது சிறப்பானதொரு ஆராதனை. ஒரு வேளை மாற்ற முடியாத பொல்லாத வியாதிகள் அல்லது நீங்கள் நினைத்ததைப் போன்று பிள்ளைகள் வாழ்வில் ஆசீர்வாதம் இல்லை என்ற கலக்கத்தினால் நொந்து கொண்டிருக்கலாம். தேவன் அதை உங்களுக்கு அனுமதித்திருந்தால் ஆண்டவர் உங்கள் வாழ்வில் இருந்து சிறப்பான ஆராதனையை எதிர்பார்க்கிறார். என்னுடைய வாழ்வில் இந்த வேதனையை சகித்து வாழ்கிற போது, துன்பத்தை சுமக்கிற போது **"கர்த்தர் அதனால் பிரியப்படுகிற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன்"** என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்காக வார்த்தையை ஆயத்தப்படுத்திய போது கர்த்தர் கொடுத்த வார்த்தை தான் இது.

உங்களுடைய துன்பத்தை எப்படி இன்பமாக மாற்ற முடியும் என்றால் கர்த்தரை சந்தோஷப்படுத்துவதினாலாகும். துன்பங்களின் நேரம் தான் சிறப்பான காரியங்களை செய்து முடிக்கக் கூடியதாக இருக்கும். தேவன் எங்களை நடத்திக் கொண்டு வருகிற பாதையிலே, எந்தெந்த நாட்களில் அதிகமான துன்பங்களுக்கு எங்களை விட்டுக் கொடுக்கிறோமோ அந்த நாட்களை குறித்து இன்னொரு நாட்களில் சொல்ல முடியும் அந்த நாட்களில் நானபட்ட துன்பம், நான் அழுத அழுகை, சிந்திய கண்ணீர் என்று. **தேவன் சில சிறப்பான துன்பங்களுக்குள் வைத்து சில சிறப்பான வாழ்க்கை முறைகளை சொல்லித் தருவார். அது உங்களுக்கு தனிப்பட்டவிதமாக உருவாக்கப்பட்ட முறை. அதை இன்னொருவர் பங்குபோட முடியாது.**

ஆபிரகாம் கர்த்தருடைய பார்வையில் மகனை பலியிட்டுவிட்டான். எனவே அவன் தன் மகனை வெட்டும்படி கத்தியை எடுத்த போது பிள்ளையாண்டான் மேல் கையைப் போடாதே என்று ஆண்டவர் சொன்னார். எது உங்களுக்கு அதிக பிரியமோ அதை தேவனுக்கு கொடுப்பது தான் ஆராதனை.

## 3. எங்களுடைய சீஷத்துவ வாழ்வில் வருகிற அர்ப்பணிப்பு

**ஆதியாகமம் 12:1-3 (1.) கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. 2. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். 3. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.** அந்த நாட்களில் தேவனை அறிந்தவர்கள் இல்லை. எத்தனையோ வருடங்களுக்கு பிற்பாடு ஆண்டவர் ஆபிரகாமோடு பேசுகிறார். ஒவ்வொரு மனிதர்களும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும் சீஷத்துவம், அழைப்பு என்பது எங்களுடைய தேசத்தை, இனத்தை, தகப்பன் வீட்டை விட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியது. அவருக்காக சீஷனாக வாழ தெரிந்து கொள்வது உயர்ந்த காரியம். அது நாம் கதைக்கிற அளவு ஏளனமாக பார்க்கிற ஒன்று அல்ல.

உண்மையில் ஊழியர்கள் என்றால் ஊழியத்தின் தாற்பரியத்தை புரிந்து கொள்ள வேண்டும். பரலோக ராஜா விற்காக வேலை செய்ய வேண்டும். *இந்த நாட்களில் பார்க்கிற போது ஜனங்கள் ஏளனமாக பார்க்கி றார்கள். சிலர் சொல்வார்கள்: படித்து பரீட்சையில் சித்தி பெறா விட்டால் அல்லது அவர்களால் ஒன்றும் செய்ய முடியாவிட்டால் ஊழியத்திற்கு வருவார்கள் என்று. D.Lமூடி என்கிற தேவ மனிதருக்கு ஆங்கில மொழியில் சரியாக பேசு வதற்கு தெரியாது. அவர் பேசும் போது அதிக இலக்கண பிழை களை விடுவாராம். ஒரு சந்தர்ப்பத் தில் அவர் ஆண்டவரைக் குறித்து பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அந்த பிரசங்கம் முடிந்த போது ஒருவர் கூறினாராம்: உங்களுடைய ஆங்கில பேச்சு நன்றாக இல்லை, நீங்கள் இலக்கண பிழையோடு பேசுகிறீர்கள் என்று. அதற்கு D.Lமூடி கூறினாராம்: இவையெல் லாம் தெரிந்த நீங்கள் வாயை மூடிக்கொண்டு இருப்பதால், நீங்கள் தேவனுடைய அன்பை சொல்லாமல், அவருடைய சுவி சேஷத்தை அறிவிக்காமல் இருப்பதால் ஒன்றும் தெரியாத என்னை சுவிசேஷத்தை சொல் லும் படி தேவன் தெரிந்து கொண்டார் என்று.*

இந் நாட்களில் ஊழியர்கள் அறிவு குறைந்தவர்களாய் கூட இருக்கலாம். ஆனால் அறிவு குறைந்தவர்கள் மத்தியில் தேவன் ஒரு நோக்கத்தை வைத்து தன்னுடைய சுவிசேஷத்தை அறிவிக்கிறார். இப்படி புத்தி குறை வானவர்களை வைத்து பரலோக ராச்சியத்திற்குரிய தன்னுடைய ஜீவ வார்த்தையின் ஆன்மீக அறிவொளி யைக் கொடுத்து தேவனுடைய ராச்சியத் திற்கு நேராக வாழ்வது எப்படியென்று தேவன் கற்றுக்கொடுக்கிறார். எனவே எங்களுடைய வாழ்வில் அழைப்பின் மேன்மையை புரிந்து கொள்ள வேண்டும். விசுவாசிகள் இரட்சிப்பின் அழைப்பின் மேன்மையை புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் தேவனுக் காக வாழ்கிற வாழ்க்கை முறையில், ஊழியத்தின் போதும் எதுவும் வந்து தடுக்கக்கூடாது. இந் நாட்களில் இரட்சிக்கப்பட்ட அனேகர் விழுந்து கொண்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட வர்கள் உலகத்திற்கும், தேவனுடைய ராச்சியத்திற்கும் இரட்டை வேஷம் போடுகிறார்கள். தேவனுடைய வாழ்க்கை முறையை ஏற்றுக் கொண்டவர்கள் போன்று இருப்பார்கள். ஆனால் அவர்களின் உள்ளான வாழ்க்கை முறையில் அதை மறுதலிப்பார்கள். தேவன் வெறுக்கிற வாழ்க்கைமுறை கடைப்பிடிக்கப்படுகிற போது எங்களு டைய வாழ்வு எங்களை அறியாம லேயே அழிவுக்குள் கடந்து செல்கிறது.

உண்மையான தேவபிள்ளை என்றால் உண்மையான வாழ்வு வாழவேண்டும். தேவனுக்காக கஷ்டம் வரட்டும், இழப்பு வரட்டும், அவப்பெயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரட்டும், நிந்தை வரட்டும் எது வந்தாலும் நான் தேவனுடைய இரத்தத்தால் கழுவப்பட்டவன் என்னுடைய வாழ்க்கை தேவனுக்காக என்று தான் சொல் வார்கள். ஞானஸ்நானம் எடுத்த போது இருந்த வாழ்க்கை முறை இப்போது இல்லை. எந்த காரியமும் அழைப்பின் காரியங்களை இடையூறு செய்யாதபடி காத்துக்கொள்ள வேண்டும். இரட்சிப் பின் தெரிவு கடினமானது. இரட்சிக்கப்பட முன்பு சொல்வார்கள்: ஆலயத்திற்கு வாருங்கள் வியாதி மாறும், குடும்ப பிரச்சினை தீரும் என்று. ஆனால் **சீஷத்துவம் என்பது அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அடியின் மேல் தங்கள் அடியை வைத்து நடக்க வேண்டும்.** அது தான் உண்மையுள்ள அர்ப்பணிப்புள்ள சீஷத்துவ ஒழுங்கு முறை.

**லூக்கா 14:26 யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளை களையும் சகோதரரையும் சகோதரி களையும், தன் ஜீவனையும் வெறுக்கா விட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்.** கிறிஸ்துவின் சீஷனாக இருக்க வேண்டும் என்றால் எங்களு டைய ஜீவனையும் மதிக்க கூடாது. ஆலயத்திற்கு வந்தால் எல்லாம் கிடைக்கும் என்று சொல்வார்கள். மாறாக உன் பாவங்கள் அவர் இரத்தத் தால் கழுவப்படும், அவரை நம்பி வா, உனக்கு இரட்சிப்பு கிடைக்கும் என்பது தான்செய்தி. இந்நாட்களில்எத்தனையோ பேர் பின்மாற்றமாய் போய்விட்டார்கள். ஏன் தெரியுமா? நாங்கள் நன்மை வரும் என்று சொன்னதை அவர்கள் நம்பி வந்து இங்கே பார்த்தால் எதுவும் நடைபெறவில்லை. சிலர் நினைக்கிறார் கள்: **தேவாலயம் என்பது பள்ளிக் கூடமாக, வைத்தியசாலையாக, வங்கியாக இருக்க வேண்டும் என்று.** தேவனுடைய ஆலயம் தேவனு டைய மக்கள் கூடுகிற பரிசுத்த ஸ்தலம். இங்கு வருகிற மக்களுக்கு இயேசு கிறிஸ்துவுக்கு ஊடாக இரட்சிப்பு கிடைக்கும்.

ஆபிரகாம் ஒன்றும் தெரியாமல் இருந்த போது தேவன் போ என்று கூறிய போது அவன் உடனே சென்றான். அது தான் அர்ப்பணிப்பு.

ஆதாம் தன்னை தேவனிடம் கொடுத்திருந்தான். அவனிடமிருந்து ஒரு விலா எலும்பை தேவன் எடுத்தார். ஒரு அர்ப்பணிப்போடு குடும்ப வாழ்க்கை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மகனை பலி செலுத்து என்று தேவன் கேட்ட போது உடனே ஆபிரகாம் போனானே அது தான் ஆராதனை யின் அர்ப்பணிப்பு.

நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்குப் போ! இது தான் அழைப்பிற்கான அர்ப்பணிப்பு!!.

அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கிறது, ஆயத்தமா வோம்!! ஆயத் தப்படுத்துவோம்.

**'தேவன் தாமே**

**உங்களை நிறைவாக**

**ஆசீர்வதிப்பாராக'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 114

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. எருப்பேசேத் (IIசாமுவேல் 11:2)

04. யோகனான் (எஸ்றா 10:6)

06. மேவிபோசேத் (IIசாமுவேல் 4:4)

08. தானியேல் (தானியேல் 5:17)

10. அநேகம் (நீதிமொழிகள் 19:21)

**வலமிருந்து இடமாக**

03. சன்பல்லாத் (நெகேமியா 4:1)

05. பினெகாஸ் (யாத்திராகமம் 6:25)

07. சிம்சோன் (நியாயாதிபதிகள் 15:16)

13. எப்பிராயீம் (Iநாளாகமம் 7:23)

**மேலிருந்து கீழாக**

01. எபெனேசர் (1சாமுவேல் 7:12)

02. அக்சாள் (நியாயாதிபதிகள் 1:15)

04. யோவாஸ் (நியாயாதிபதிகள் 6:31)

**கீழிருந்து மேலாக**

09. திகிலாத்பிலேசர் (IIஇராஜா 16:9)

11. மிகாயா (IIநாளாகமம் 18:18)

12. அத்தாலியாள் (IIஇராஜா 11:14)

13. எகொனியா (எரேமியா 24:1)

# வினா விடை - 117

01. கர்த்தரை உத்தமமாய் பின்பற்றி வந்த இருவர் யார்? யார்?

02. அஞ்சனம் பார்க்கிறவர்களை... அறுப்புண்டு போகப்பண்ணுவேன் என்றவர் யார்?

03. இரட்சிக்கப்பட வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தவர்கள் யார்?

04. 'எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான்' யார்?

05. 'இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்' என்ற தீர்க்கதரிசி யார்?

06. 'என் புருஷன் என்னை நேசிப்பார்' என்று சொன்ன ஸ்திரீ யார்?

07. 'என் பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிட்டீர்' என்று சொன்ன ராஜா யார்?

08. 'என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னைவிட்டு விலக்கேன்' என்று சொன்னவர் யார்?

09. 'கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்' என்று வாசிப்பதெங்கே?

10. 'என்னை இரட்சியும்' என்று சொன்னவள் யார்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 114, வினா விடை - 116

## சரியான விடை எழுதியவர்கள்

**தர்மபுரம்**
01. வ.வசிகலா
02. ற.நிதுமிகா +
03. க.கலைச்சுடர்
04. பி.சுடர்
05. ஜெ.நிதுசன் +
06. ஜா.ஜோன்வெஸ்லி
07. ச.விதுசிகா
08. பி.சுவர்ணன்
09. க.தமிழோவியன் *
10. ஜெ.நிரோமி +
11. நி.அருட்செல்வி
12. சி.வளவன் +
13. வ.வசிகரன்
14. உ.கிறேஸ்சுனா
15. ஜா.ஜொலிற்றா வில்மா *
16. பி.புகழ்நிலா
17. நி.றொபினா
18. த.சுஜீனா

**கிளிநொச்சி**
19. ம.பிளசிகா
20. அ.அனுஜன் +
21. அ.ஜென்சி +
22. அ.மேனுஷா

**பாண்டவெட்டை**
23. மு.ஜெசிந்தா
24. சி.சிவனேஸ்வரன்
25. சி.சுமித்திரா

**கனடா**
26. குகன் குடும்பம்

**திருநெல்வேலி**
27. என்.செல்வன்

* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

'வேரில்லை. ஆனால் அதில் இலையும், பூவும், பழமும் உண்டு' அது என்ன?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2023 ஆடி - ஆவணி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

விலைக்கிரயம் ரூபா 55,00,000.00 மிருக ஜீவன்கள் 11500
ரூபா 1,10,00,000.00 மிருக ஜீவன்கள் 23000

**(யோபு 1:3, 42:12)**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறருடைய கருத்து

**வேதப்பகுதி: நெகேமியா 4:1-10**

கலைநிகழ்வு தினத்தில் நடந்த இயேசு பிறப்பு குறுநாடகத்தில் நிக்கல்சன் நடித்தான். மறுநாள் அறிவழகன் அவனிடம் வந்து 'நேற்று நீ நடித்தது பார்க்கவே சகிக்கல. உனக்கு நடிக்கவே தெரியல. யோசேப்பாக நடித்த அந்த திமோதி எவ்வளவு நன்றாக நடித்தான் பார்த்தாயா?' என்றான். நிக்கல்சனுக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. இனி எந்த கலை நிகழ்ச்சியிலும் பங்கு பெறுவதில்லை என்று முடிவு செய்தான்.

ஆனால் உண்மையில் நிக்கல்சன் நன்றாகத்-தான் நடித்திருந்தான். அறிவழகன் பொறாமையினால் தான் அப்படிச் சொன்னான். மற்றவர்கள் சொல்லுகின்ற கருத்தினை அப்படியே ஏற்றுக்கொள்வது நல்லது அல்ல. பிசாசானவன் நாம் நல்லதை தொடர்ந்து செய்யாதபடி இப்படித்தான் செயல்படுவான். நெகேமியா எருசலேம் மதிலைக் கட்டினார். ஆனால் பொறாமைக்காரர்களாகிய சன்பல்லா-த்தும் தொபியாவும் 'உங்களால் இது கூடாது' என்றனர். ஆனால் நெகேமியா மனந்தளராமல் கட்டி முடித்தார்.

**சிந்தனைக்கு:-**

**பிறர் சொல்வதை கேளாமலும் இருக்கக் கூடாது. அப்படியே அவர்கள் சொல்வதெல்லாம் சரி என்று எண்ணிவிடவும் கூடாது.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்' – ஜூன் 12

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:......................................

முகவரி:......................................

..............................................

..............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org